யா/கோப்பாய் வடக்கு றோ.க.த.க பாடசாலை

# கல்விச் சுற்றுலா
# 2018




அறிக்கை

# யா/கோப்பாய் வடக்கு றோ.க.த.க பாடசாலையின் 2018 ம் ஆண்டுக்கான கல்விச் சுற்றுலா

மேற்படி சுற்றுலாவானது 01.06.2018 வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. பாடசாலை மாணவரகள் 35 பேருடன் 7 ஆசிரியர்கள் 4 பெற்றோர்கள்மற்றும் வாகனச்சரதி அடங்கலாக 46 பேருடன் காலை 7.00 மணியளவில் பேரூந்து புறப்பட்டது. கோப்பாய் மானிப்பாய் வீதியூடாக சென்று பின் K.K.S வீதியூடாக காங்கேசன் துறை புகையிரதநிலையத்தை அடைந்து அங்கு புகையிரதத்தில் ஏறிப்பார்வையிட்டோம்




அங்கிருந்து காங்கேசன் துறை துறைமுகத்தை பார்வையிட்டோம். அங்கு கப்பல் ஒன்றில் இருந்து சீமெந்து இறக்கும் காட்சியையும் பல கப்பல்கள் தரித்து நிற்கும் காட்சியையும்கண்டு களித்தோம்.




அங்கிருந்து கீரிமலையில் உள்ள நகுலேஸ்வரத்திற்குச் சென்றோம் . அங்கு நகுலேஸ்வரநாதரை வழிபட்டுக்கொண்டு அன்றைய காலையுணவும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.அதனைத் தொடர்ந்து தெல்லிப்பளை துர்க்கையம்மன் கோயிலுக்குச்

சென்று வழிபாட்டில் ஈடுபட்டோம்.





அங்கிருந்து கந்தரோடையில் உள்ள அகழ்வாரட்சி நிலையத்துக்குச் சென்று அங்குள்ள சமாதிகளையும் புத்த கோயிலையும் பார்வையிட்டோம்





அங்கிருந்து திருநெல்வேலி உள்ள யாழ் கோ பால் உற்பத்தி நிலையத்தை அடைந்து அங்கு பால் உற்பத்தியால் செய்யப்படுகின்ற பொருட்களான யூஸ் பன்னீர் பால் டொபி செய்யும் முறையை பார்வையிட்டுக்கொண்டு அங்கிருந்து திருநெல்வேலி விவசாயப்பண்ணையில் உள்ள மூலிகைத்தோட்டத்தினையும் பலவகையான நாற்றுச்சாடியினையும் பார்வையிட்டுக்கொண்டு காளான் உற்பத்தி செய்யும் அறைகளையும் பார்வையிட்டு பயன் பெற்றோம்.







அங்கிருந்து புறப்பட்டு சாட்டி மாதா ஆலயத்தினை அடைந்து அங்கு மதிய உணவை உண்டு மகிழ்ந்து மாணவர்கள் வழிபாட்டிலும் ஈடுபட்டனர். தொடரந்து சாட்டி கடற்கரையையும் பார்வையிட்டு அங்கு காணப்பட்ட கடற்தாவரங்களையும் கடலை அண்டிவளரும் தாவரங்களையும் பார்வையிட்டனர். கடற்கரையில் விளையாடியும் மகிழ்ந்தனர்





சாட்டிக்கடற்கரையில் மாணவர்கள்





அங்கிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணத்தில் உள்ள சுப்பிரமணியம் பூங்காவிற்கு வந்தோம் அங்கு மாணவரகள் விளையாடினார்கள்.



பி ப 5 மணிக்கு புறப்பட்டு 5.30 மணிக்கு பாடசாலையை வந்தடைந்தோம்.சுற்றலா இனிதே நிறைவுற்றது